கழகச் சைவ வினவிடை

(முதற் புத்தகம்)

ஆசிரியர்:
துடிசைகிழார், அ. சிதம்பரனாரவர்கள்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

கழக வெளியீடு : ௲௩௬

கழகச்
சைவ வினாவிடை

[முதற் புத்தகம்]

தமிழ், சமயம், பலகலை வல்ல
துடிசைகிழார், அ. சிதம்பரனாரவர்கள்
எழுதியது.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

Third Edition : Sep., 1954.

பதிப்புரை

வாழ்க்கை, சமய வாழ்க்கையாக மலரும்போதுதான் இன்பம் பெருகுகின்றது. நட்பமாக வாழ்வதும், பிறர்க்கு உதவியாக வாழ்வதும், உண்மையறிவாக வாழ்வதும் சமய வாழ்க்கையிற் கால்கொள்ளும்.

தமிழ்நாட்டின் சமயம் சைவசமயம் எனப்படும். சைவ சமய உண்மைகள், மெய் வாழ்வுக்கு மிக்க ஆக்கமானவை. தமிழ் நாட்டவர்களாகிய சைவ சமயத்தார், தம் சமய உண்மைகளை விளக்கமாக அறிந்து வாழ்க்கையிற் கடைப்பிடித்து ஒழுகிவர வேண்டும்.

ஒழுக்கம் இளமையிலிருந்தே அரும்புவது நல்லது. '**கழகச் சைவ வினுவிடை**' என்னும் இந்நூல், சிறுவர்களுக்கும் பயன் படும்படி வினுவிடையில் இரண்டு புத்தகங்களாக எழுதப்பெற்றிருக்கிறது. இது முதற் புத்தகம்.

பரம்பரைச் சைவப் பெரியாரும், ஒழுக்க சீலரும், சைவ ஞான நூல் வல்லுநரும், சிவ வழிபாடு உடையவரும், 'உருத்திராக்க விளக்கம்' 'விபூதி விளக்கம்' 'நித்திய கரும விளக்கம்' முதலிய சைவ ஒழுக்க நூல்களை நீண்ட நாட்களுக்கு முன்பே இயற்றி வெளியிட்டிருப்பவரும், ஆராய்ச்சியாளருமான **துடிசைகிழார் அ. சிதம்பரனூரவர்கள்** இச் சைவ வினுவிடையையும் இயற்றி உதவியிருக்கின்றனர். சைவ நன்மக்களும் பிறரும் இந் நூல் வரிசையினையும் வாங்கிப் போற்றிக் கொள்வார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 6200.

கழகச்

சைவ வினாவிடை

[முதற் புத்தகம்]

க. இறை இயல்

(க) நாம் யார்?

நாம் ஆன்மாக்கள்.

(உ) நாம் வெளியில் எதனைப் பார்க்கின்றோம்?

உலகத்தை.

(ங) உலகத்தைப் படைத்தது யார்?

இறைவன்.

(ச) உலகத்தை நாம் படைக்க முடியுமா?

முடியாது.

(ரு) உலகம் தானாக உண்டாயிருக்குமா?

உலகம் தானாக உண்டாகாது. தோற்றுவிக்கிறவன் ஒருவன் வேண்டும். அவன்தான் இறைவன். குடம் தானாக உண்டாகாமல் குயவனால் வனையப்படுவது போல.

(சா) இறைவனைப் பற்றி நாம் அறிவது எப்படி?

அதற்கு, முதலில் சமயஞானம் வேண்டும்.

(எ) நம்முடைய சமயம் யாது?

சைவ சமயம்.

(அ) சைவம் என்றால் என்ன?

நமக்கு இறைவன் சிவன்; சிவத்தின் தொடர்புடையது சைவம்.

(௯) சிவத்தின் தன்மை என்ன?

சிவன், உரிமை - தூய்மை - தெளிவு - முழுமை - அறிவு - அருள் - ஆற்றல் - இன்பம் என எட்டுக் குணங்களை உடையவன்.

(௧௦) சிவத்தின் தொழில் என்ன?

ஆக்கல் - அளித்தல் - அழித்தல் - மறைத்தல் - அருளல் என்னும் ஐந்து தொழில்களாம்.

(௧௧) சிவபெருமான் ஐந்து தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார்?

தம் வல்லமை (சத்தி) யைக் கொண்டு செய்வார்.

(௧௨) வல்லமை என்றல் என்ன?

வல்லமை - ஆற்றல் (Power - Positive Energy); அதில் பல வகைகள் உண்டு. அவைகளில் முதன்மையானவை பரை - ஆதி - இச்சை - கிரியை - ஞானம் என்பன.

(௧௩) சிவபெருமான் இந்த வல்லமைகளைக் கொண்டு எப்படித் தொழில் செய்வார்?

சிவன் ஆதிசத்தியோடுங்கூடி ஆக்கல் தொழிலையும் - சிவன் இச்சா சத்தியோடுங் கூடி அளித்தல் தொழிலையும் - சிவன் கிரியா சத்தியோடுங் கூடி மலம் நீக்கமாகிய அழித்தல் தொழிலையும் - சிவன் ஞான சத்தியோடுங் கூடி மறைத்தல் தொழிலையும் - சிவன் பராசத்தியோடுங் கூடி அருளல் தொழிலையும் செய்வார்.

(௧௪) சிவன் சத்தியின் உதவி இல்லாமல் ஐந்தொழில்களைச் செய்ய முடியாதா?

முடியாது. மின்சாரத்தில் (Negative, Positive) என்ற இரண்டு சத்திகள் சேர்ந்தால் அல்லாமல் விளக்கம் இல்லாதது போல என்க.

(௧௫) சிவனுக்கு உருவம் உண்டா?

சிவனுக்கு உருவம் - உருவ அருவம் - அருவம் என மூன்று நிலைகள் உண்டு.

(கசு) உருவ நிலை எது?

25 நிலைகளுடன் விநாயகர் - ஆறுமுகர் - வீரபத்திரர்- வைரவர் - சாத்தனுர் ஆக 5 நிலைகளையுங் கூட்ட, 30 நிலைகளும் உருவநிலை.

(கஎ) உருவ அருவ நிலை எது?

சிவலிங்கம்.

(கஅ) அருவ நிலை எது?

மண்முதல் சாதாக்கியம் ஈருக உள்ள தத்துவங்களை இயக்கும் சிவபெருமானின் ஐம்பெரும் உருவநிலைகளையும் இயக்கும் விந்து தத்துவத்தில் உள்ள நிலை.

(கக) சிவபெருமான் எங்கே இருக்கிறுர்?

எங்கும் இருக்கிறுர். ஆனல் தாவரம் - சங்கமம் என்ற உருவங்களில் சிறந்து விளங்குகிறுர்.

(உ0) தாவரம் என்றுல் என்ன?

சிவலிங்கம்.

(உக) சங்கமம் என்றுல் என்ன?

சிவனடியார்கள்.

(உஉ) சிவபெருமான் எப்படி அருள் செய்வார்?

அடியார்கள் மூலமாகவும் - சிவலிங்க மூலமாகவும் அருள் செய்வார்.

“ தெய்வம் சிவனே சிவனருள் சமயம்
சைவம் சிவத்தோடு சம்பந்தம் என்றுன்
சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி ”

—சிற்றம்பலநாடிகள்.

உ. இருவினை இயல்

(க) இருவினை என்பது என்ன?

புண்ணியம், பாவம் என்பன இருவினை எனப்படும்.

(உ) புண்ணியங்கள் எவை?

கடவுள் வழிபாடு-பெற்றோர்ப் போற்றல் - சுற்றந்தழுவுதல் - பெரியோர் சொற்படி நிற்றல் - பிற உயிர்களுக்கு இரங்குதல் - வாய்மை முதலிய அறநெறிகளைக் கடைப்பிடித்தல் - முதலியன.

(ங) பாவங்கள் எவை?

கொலை - களவு - கள் - காமம் - பொய்கூறல் - புலால் உண்ணுதல் - கற்பு நிலை தவறல் - சூதாட்டம் - புறங் கூறல் - பொய் வேடம் முதலியன.

(ச) புண்ணியங்களைச் செய்வதனால் என்ன பயன்?

ஒளி உலகங்களில் சென்று இன்பங்களைத் துய்க்கலாம்.

(ரு) பாவங்களைச் செய்தவர் அடைவதென்ன?

அவர்கள் இருள் உலகங்களிலே சென்று துன்பத்தையே அடைவார்கள்.

(சு) ஒளியுலகங்கள் எங்கே உள்ளன?

நாம் பார்க்கும் சூரியனும் அதனைச் சுற்றி ஓடுகின்ற அண்டங்களும் சேர்ந்தது ஒரு பேரண்டம் எனப்படும். இம்மாதிரி பேரண்டங்கள் கணக்கில்லாமல் வானூடு இருக்கின்றன.

நாம் இருக்கும் இப் பேரண்டத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள புதன் - சுக்கிரன் - செவ்வாய் முதலிய அண்டங்கள் ஒளி உலகங்கள் எனப்படும்.

பூமிக்கும் அப்பாற்பட்டுச் சூரியனுக்கு நெடுந்தூரத்திலுள்ள சனி - வருணன் - முதலிய அண்டங்கள் இருள் உலகங்கள் எனப்படும்.

இருவினை இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவ தாகும் மன்னிய வினைப்ப லன்கள்
தரும்அரன் தரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவும் கன்ம பலன்களும் மறுமைக் கண்ணே,

—அருணந்திசிவம்.

௩. திருநீற்றியல்

(க) நம் சமயம் சைவசமயம் என்று முதல் இயலில் படித்தோம். சைவ சமயிகளின் குறிகள் என்ன?

திருநீறு அணிதல் - உருத்திராக்கம் தரித்தல் - அஞ்செழுத்து ஓதல் ஆகும்.

(உ) திருநீறு என்பது என்ன?

பங்குனி மாதத்தில் நெல் அறுக்கப்பட்ட கழனிகளில் மேய்ந்த, நோய் இல்லாத பசுக்களின் சாணத்தை, ஓர் நன்னாளில் எடுத்து உருண்டை செய்து, காயவைத்து, முறையாகப் புடம் இட்டு அதனால் உண்டாகும் நீற்றை எடுத்து, வடிகட்டி, மணம் ஊட்டி வைத்துக்கொள்ளும் பொடிக்கு நீறு என்று பெயர்.

(௩) நீற்றின் நிறம் என்ன?

வெண்மை.

(ச) திருநீற்றை எதிலே வைத்துக்கொள்ளல் வேண்டும்?

பட்டுப் பையிலேனும், சிறுசெப்பிலேனும், மடலிலேனும் வைத்துக்கொண்டு அணிதல் வேண்டும்.

(ரு) எந்தமுகமாக இருந்து திருநீறு அணிதல் வேண்டும்?

வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து அணிதல் வேண்டும்.

(சா) திருநீற்றுக்கு வேறு பெயர்கள் உண்டா?

உண்டு. அவை: விபூதி - சாரம் - ஐசுவரியம் முதலியன.

(எ) திருநீறு அணியும் முறை என்ன?

திருநீற்றைப் பையில் இருந்து எடுக்கும்போது நிலத்திலே சிந்தாமல் எடுத்து, வடக்கேனும் கிழக்கேனும் நோக்கி உட்கார்ந்து, அண்ணாந்து, "சிவ - சிவ" என்றாவது, "சிவயநம" என்றாவது கூறி, வலக்கையின் நடு மூன்றுவிரலினால் நெற்றியிலே அணிதல் வேண்டும்.

(அ) நடந்துகொண்டாயினும், கிடந்துகொண்டாயினும் திருநீறு தரிக்கலாமா?

தரிக்கலாகாது.

(கூ) திருநீறு நிலத்தில் சிந்தினால் என்ன செய்யவேண்டும்?

சிந்திய நீற்றை எடுத்துவிட்டு, அந்த இடத்தைத் தூய்மை செய்தல் வேண்டும்.

(கo) எந்தக் காலங்களில் திருநீறு முதன்மையாகத் தரிக்க வேண்டும்?

சூரியன் உதிக்கும் போதும், அத்தமிக்கும் போதும், பல் விளக்கிய உடனும், குளித்த உடனும், உண்ணப்போகும் போதும், உண்டபின்னும், தூங்கப்போகும்போதும், தூங்கி எழுந்த உடனும், கெட்டகனாக் கண்டபோதும், மலசலம் கழித்து விட்டுக் கைகால் தூய்மை செய்த உடனும் முதன்மையாகத் தரித்தல் வேண்டும்.

(கக) பெரியோர்களிடத்தில் திருநீறு எப்படி வாங்க வேண்டும்?

பெரியோர்களை முதலில் வணங்கி, எழுந்து, இரண்டு கைகளையும் சேர்த்து நீட்டி வாங்கல் வேண்டும். வாங்கித் தரித்துக் கொண்டு மீண்டும் வணங்கவேண்டும்.

(கஉ) வணக்கம் எத்தனை வகை?

மார்பின் பக்கத்தில் இரண்டு கைகளையும் சேர்த்து வணங்குதல் ஒருமுறை; தலைக்கு மேலே இரண்டு கைகளையும் சேர்த்து வணங்குதல் இரண்டாவது முறை; தரையில் விழுந்து தலை, இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு செவிகள், நெற்றி ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்தில்பட வணங்குதல் மூன்றாவது முறை.

(கங) இந்த முறை பெண்களுக்கும் உண்டோ?

இல்லை; பெண்களுக்கு ஐந்து உறுப்புக்களே நிலத்தில் படிய வேண்டும். அவை: தலை, இரண்டு முழங்கால்கள், இரண்டு உள்ளங் கைகள் என்பன.

(கச) திருநீறு அணிதல் எத்தனை வகைப்படும்?

இரண்டு வகைப்படும்; வரைகள் உள்ளதாகத் தரிப்பது ஒரு வகை; வரைகள் இல்லாமல் ஏகமாகத் தரிப்பது மற்றொரு வகை.

(கரு) சுவாமி முன்னும் பெரியோர் முன்னும் நீறு எப்படித் தரித்தல் வேண்டும்?

விபூதியைப் பெற்றுக் கொண்ட உடன் முகத்தைத் திருப்பி நின்று, தரித்தல் வேண்டும்.

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவா யான்திரு நீறே."

—ஞானசம்பந்தர்.

---

௩. உருத்திராக்க இயல்

(க) உருத்திராக்கம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

உரு - உடல்
திரம் - உறுதி
ஆக்கம் - விளைவிப்பது.

உடலுக்கு உறுதியை விளைவிப்பது என்பது பொருள்.

(உ) அது எப்படி உடலுக்கு உறுதியை உண்டு பண்ணும்?

உருத்திராக்கம் என்னும் காயில் மனிதனுக்கு உரிய காந்த சத்தும் மின்சார சத்தும் உள்ளன. அந்தச் சத்துக்கள் கூர்மையான இடத்திலேயே வந்து வெளிப்படும். காயின் உள்ளிருக்கும் சத்துச் சிறிது சிறிதாக வெளிப்படும் பொருட்டே உருத்திராக்கக் காயின் மேல்புறம் முள்ளுமுள்ளாகப் படைக்கப்பட்டிருக்கிறது. நாம் அதைத் தரித்துக்கொண்டால் அந்தச் சத்துக்கள் காயினின்றும் வெளிப்பட்டு, தேகத்தின் இரத்தத்தோடு கலந்து, அதனைத் தூய்மை செய்து உடலுக்கு உறுதி பயப்பிக்கும்.

(ங) உருத்திராக்கத்தில் எத்தனை வகை உண்டு?

உருத்திராக்கத்தில் ஒரு முகம் முதல் 16 முகம் வரை உண்டு.

(ச) உருத்திராக்கத்தின் நிறம் என்ன?

பொன் நிறம்.

(ரு) வேறு நிறங்கள் உண்டா?

நன்றாய் முற்றின காய் பொன் நிறத்தை உடையது. காய் முற்றாததற்கு முன் பறித்துவிட்டால் வேறு பல நிறங்கள் கிடைக்கும். மேலும், பறித்தவுடன் காய்களைக் கடுகு எண்ணெயில் போடுவதாலும் நிறம் மாறுபாடாகத் தோன்றும். ஆயினும், காயின் இயற்கை நிறம் பொன் நிறம் ஆகும்.

(சு) பத்திராக்கம் என்று சொல்லப்படுவது என்ன?

வேம்பில், மலைவேம்பு ஊர்வேம்பு என்றும், அரசில் நல்லரசு பூவரசு என்றும் உள்ளது போல, உருத்திராக்க மரத்தில் உருத்திராக்கம் பத்திராக்கம் என இருவகை மரங்கள் உள்ளன.

பத்திராக்கக் கொட்டைக்கு முகங்களும் துளையும் செயற்கை; உருத்திராக்கக் கொட்டைக்குத் துளையும் முகங்களும் இயற்கை.

(எ) உருத்திராக்கம் எங்கே விளைகிறது?

இமயமலை ஒன்றிலேதான் உண்டாகிறது; வேறு இடங்களில் விளைவதில்லை.

(அ) உருத்திராக்கத்தின் குணம் என்ன?

நன்றாய் விளைந்த உருத்திராக்கத்தை முலைப்பாலில் உரைத்துச் சிறிதளவு உட்கொண்டால் சன்னி - வலிப்பு - மயக்கம் - மூளைக்கொதிப்பு முதலியன அடங்கும். இதற்குக் கண்டாவிழ்தம் என்று தமிழ் மருத்துவர் கூறுவர்.

(கூ) உருத்திராக்கத்தை எங்கே தரித்தல் வேண்டும்?

கழுத்திலும், மார்பிலும் முதன்மையாகத் தரித்தல் வேண்டும். மற்ற இடங்களில் அவரவர்கள் வாய்ப்புப்போல் தரித்துக் கொள்ளலாம்.

(௧௦) உருத்திராக்கத்தைத் தரிக்கும் முறை என்ன?

கழுத்தில் ஒன்றும், மார்பில் 32 சேர்ந்த மாலையும் தரித்தல் வேண்டும். உருத்திராக்க மாலையில் உருத்திராக்கங்களின் இடையில் வில்வ ஓடு சேர்த்துத் தரிக்க வேண்டும். பலர் வில்வ ஓட்டின் சுற்றுப் புறத்தில் தங்கத் தகடு கட்டித் தரித்தலும், இரட்டை உருத்திராக்கத்தை உள் வைத்து மேலே பொன்னால்

சிவலிங்க உருவமோ வேறு உருவங்களோ செய்து தரித்தலும் உண்டு.

(கக) வில்வ ஒடு இடையில் சேர்ப்பதன் காரணம் என்ன?

மின் சத்தும் காந்த சத்தும் உருத்திராக்கத்தில் உள்ளன என்பதை மேலே கூறினும்; ஒவ்வொரு சத்திலும் இரண்டு வித (ஆண்—பெண் = Negative—Positive) சத்திகள் உண்டு என்றும் கூறினும். வில்வ ஒடு மேற்கண்ட சத்திகளைத் தடுக்கும் வல்லமை உள்ளது. ஆதலின் 32 உருத்திராக்கக் காய்களின் இடையில் வில்வ ஒட்டைக் கோத்தால் பலன் அதிகம். அப்படிக் கோக்காவிட்டால் அவ்வளவு உருத்திராக்கக் காய்களின் சத்தியும் ஒரு காயின் சத்தியைப் போன்றதே ஆகும்.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

—சேக்கிழார்.

ரு. ஐந்தெழுத்தியல்

(க) ஐந்தெழுத்து என்றால் என்ன?

'நமசிவய' என்பதுதான் ஐந்து எழுத்துக்கள். ஒவ்வோர் எழுத்தும் ஓரெழுத்து ஒருமொழியாகும். ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் ஆற்றலை (சத்தியை)க் குறிக்கும்.

(உ) ஐந்தெழுத்துக்களை ஓதும் முறை யாது?

"ந - ம - சி - வ - ய" என்ருவது, "சி - வ - ய - ந - ம" என்ருவது ஓதலாம்.

உலக இன்பங்களை விரும்புவோர் நகரத்தை முதலாகவும், அஞ்ஞானம் நீங்கி அறிவு விளக்கம் வேண்டுபவர் சிகரத்தை முதலாகவும் வைத்து ஓதலாம்.

(ங) ஒவ்வோர் எழுத்தும் எதைக் குறிக்கிறது?

நகரம்	திரோதம் மறைத்தற் சத்தியையும்
மகரம்	மலத்தையும்
சிகரம்	சிவத்தையும்

வகரம் அருளாகிய சத்தியையும்
யகரம் ஆன்மாவையும் குறிக்கும்.

(ச) எப்போது எப்படி ஓதுதல் வேண்டும்?

எப்பொழுதும் ஓதலாம். அப்படி இயலாதவர்கள் காலை - நண்பகல் - மாலை நேரங்களில் கை கால் துப்புரவு செய்து கொண்டு, வடக்காகவேனும் கிழக்காகவேனும் உட்கார்ந்து திருநீறு தரித்து, மனதை ஒருமுகப்படுத்தி, 10 தரமேனும், 108 தரமேனும் ஓதுதல்வேண்டும்.

(ரு) ஐந்தெழுத்துக்களை ஓதுவதற்கு உரியவர் யார்?

உயிர்களிடத்து இரக்கம் உடையவர்களும், தீக்கை பெற்றவர்களும்.

(சு) தீக்கை எத்தனை வகைப்படும்?

தீக்கை, சமயம் - விசேடம் - நிருவாணம் - குருமுழுக்கு என நான்காம்.

(எ) தீக்கை என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?

தீ என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல் தீக்கை. மலத்தைத் தீய்த்து ஞானத்தைக் கொடுத்தலுக்குத் தீக்கை என்று பெயர். கை, தொழிற்பெயர் விகுதி. தீக்கை பெற்றவன் அறிவு விளக்கம் பெறுவதால் தீக்கையைச் செய்துகொள்ளவேண்டும்.

(அ) தீக்கையை எப்பொழுது செய்து கொள்ளல் வேண்டும்?

சைவராயுள்ளோரில் ஆணும் பெண்ணும், ஐந்து - அல்லது ஏழு - அல்லது பத்து - அல்லது 12 வயதுக்குள் சமய தீக்கையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; பிறகு, வாய்ப்புப் போல் விசேட தீக்கை பெற்றுச் சிவ பூசையைக் கைக்கொள்ள வேண்டும்; பின் நிருவாண தீக்கை பெறவேண்டும். நிருவாண தீக்கை பெற்றவர்களே ஞானநூலோதுதற்கு அதிகாரியாவர். ஆசிரியத் தன்மையில் அதிகாரமுடையவர்கள் குருமுழுக்குப் பெற வேண்டும்.

(கூ) சைவரைத் தவிர வேறு இனத்தாருக்குத் தீக்கை உண்டா?

சைவசமயத்தில் செய்யும் தீக்கை மற்றவர்களுக்குக் கிடையாது. ஆனால், அவர்கள் எல்லாம் தீக்கை போன்றதொன்றை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். கிறித்தவர் 'பாப்டிசம்' என்றும், மகமதியர் 'சுன்னத்' என்றும், ஆரியர் 'பூணூல்' என்றும் வைத்துக்கொண்டிருக்கின்றனர் :

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

—திருநாவுக்கரசர்.

---

௩. நித்திய கரும இயல்

(க) நாடோறும் நாம் எப்போது எழுந்திருக்கவேண்டும் ?

சூரியன் உதயமாவதற்கு ஐந்து நாழிகைக்கு முன் எழுந்திருக்கவேண்டும்,

2½ நாழிகை ஒரு மணி நேரம் ஆகும்.

(உ) எழுந்து என்ன செய்ய வேண்டும் ?

எழுந்தவுடன், திருநீறு அணிந்து, தன்னை இரவில் காப்பாற்றிய இறைவனை வணங்கிப் புகழ்ந்து பாடவேண்டும்.

(ங) பின் என்ன செய்யவேண்டும் ?

மலசலம் கழித்துக், கால் அலம்பி, வாய் கொப்பளித்து, பல்விளக்கி, குளித்தல் வேண்டும்.

(ச) மலசலம் எங்கே எவ்வாறு இருந்துகொண்டு கழித்தல் வேண்டும் ? மலசலங் கழித்தபிறகு எவ்வாறு சுத்தி செய்தல் வேண்டும் ?

அதற்காக ஏற்படுத்திய இடத்தில், அம்மாதிரி இடம் இல்லாவிட்டால் ஆடு மாடு மனிதர்கள் நடமாடும் இடம், கோவில் பக்கம், நீர்க்கரை, பூந்தோட்டம், உழுதநிலம், சுடுகாடு, இடுகாடு, புதைகாடு முதலிய இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் கழித்தல் வேண்டும். கழிக்கும்போது தலையையும் காதுகளையும்

சேர்த்துத் துணியினால் கட்டிக்கொண்டு வேறு நினைப்பு இல்லாமல், நேராக உட்கார்ந்து கழித்தல் வேண்டும்.

செம்பில் தண்ணீர் எடுத்து, பின், குதத்தையும் குறியையும் நன்றாக அலம்பிப் பின் கை கால்களை அலம்பவேண்டும், பின் வாய் கொப்பளிக்க வேண்டும்.

(ரு) எதைக்கொண்டு பல் விளக்க வேண்டும்?

ஆல் - வேல் - வேம்பு - பூல் கொம்புகளாலோ, முறையாகச் செய்யப்பட்ட பற்பொடி, பற்பிசின் முதலியவைகளாலோ விளக்க வேண்டும்.

மண் - சாம்பல் - செங்கற்பொடி முதலியவைகள் கூடா; பல் நசித்துவிடும்.

(சா) எப்படிப் பல் விளக்க வேண்டும்?

பல் இடுக்கில் உள்ள துணுக்குகள் போகும்படியாக விளக்கல் வேண்டும். பின் குச்சியின் பிளவாலோ - வெள்ளி முதலிய உலோகங்களால் செய்த பிளவாலோ நாக்கை வழிக்க வேண்டும். நின்றுகொண்டாவது, நடந்துகொண்டாவது பல் விளக்கலாகாது.

(எ) எப்படிக் குளித்தல் வேண்டும்?

ஆறு, குளம், கேணிகளில் இறங்கியோ, அல்லது, அகண்ட பாத்திரம், தொட்டி முதலியவற்றில் தண்ணீரை நிறைத்து அதில் உட்கார்ந்து குளித்தல் வேண்டும். அல்லது, செம்பில் தண்ணீரை எடுத்துத் தலையில் கொட்டிக்கொள்ளல் வேண்டும். தலையொழித்துக் குளித்தல் கூடாது.

(அ) பின் என்ன செய்யவேண்டும்?

பின், உடம்பைத் துடைத்துக் காய்ந்த உடையை உடுத்துக் கொண்டு விபூதி தரித்து அநுட்டானம் செய்தல் வேண்டும்.

(கூ) அநுட்டானம் என்பது என்ன?

சுத்தமான நீர்கொண்டு, விபூதியைக் குழைத்து, தலை - நெற்றி - மார்பு - கொப்பூழ் - இரண்டு முழங்கால் - இரண்டு புயம் - இரண்டு முழங்கை - இரண்டு மணிக்கட்டு - இரண்டு விலாப்புறம் - முதுகு - கழுத்து ஆகிய 16 இடங்களில் மூன்று வரையாக இட்டு, முக்குடி நீர்பருகி, அஞ்செழுத்து ஓதுதலாகும்.

(கo) முக்குடிநீர் என்ருல் என்ன?

உள்ளங்கையில் உழுந்தளவு நீரை வார்த்து மூன்றுதரம் உட்கொள்ளுதல்.

இப்படிச் செய்வதால், காய்ந்திருக்கும் தொண்டையும், தொண்டைக்குக் கீழேயிருக்கும் குழாயும் நனைந்து, இனியவாயிருக்கும்.

“எவரேனுந் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறனினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.”

—அப்பர்.

எ. ஆலய இயல்

(க) அநுட்டானத்துக்குப் பின் என்ன செய்தல்வேண்டும்?

ஆலயத்திற்குப் போய் இறைவனைத் தொழுதல் வேண்டும்.

(உ) ஆலயம் என்ருல் என்ன?

ஆ+இலயம் - ஆலயம்; (இலயத்திலுள்ள முதல் எழுத்துக் கெட்டு ஆலயம் என்று ஆயிற்று).

ஆ - அகரத்தின் நீட்டமே ஆகாரம் ஆதலின், அ - பதியைக் குறிக்கும்.

இலயம் - பதிந்திருக்கும் நிலை; ஞானம் மாத்திரமே திருமேனியாக உடைய கடவுள் நிலைக்கு ஆலயம் என்று பெயர்.

இலயித்தல் - (சி. போ—1- -2—1.) இரண்டு பொருள் வேற்றுமையறக் கலத்தல் என்று பொருள். அஃதாவது, ஆன்ம உணர்ச்சி சிவசத்தியிற் கலந்து, துன்பம்அற நிற்பதற்கு உரிய இடம் ஆலயம்.

(௩) சிவசத்தி எங்கும் பரந்து இருப்பதால் ஆலயம் என்று ஓர் இடம் வேண்டுவது தானு?

ஆம்; கட்டாயம் வேண்டும். மின்சார சத்தியும், காந்த சத்தியும் உலகில் பரவி இருந்த போதிலும், அச் சத்திகளின் பயனை அடைய மின்சார நிலையம் (Telegrapic Station) ஒன்று வேண்டியிருப்பது போல, சிவ சத்தியின் அருளைப்பெற ஆலயம் வேண்டுவதே. பெரியோர்கள் ஆலயங்கள்தோறும் சிவ சத்தியைப் பதித்திருப்பதனுலேதான் அத்தகைய நிலையங்களுக்குக் காரணப் பெயராக, பதிபதித்த இடம் என்று பொருள் தரும்படியான ஒரு பெயரை, அஃதாவது, ஆலயம் என்ற பெயரை இட்டிருக்கிருர்கள்.

(௪) ஆலய அமைப்பு எப்படிப்பட்டது?

அண்டத்தையும் பிண்டத்தையும் ஒருங்கே காட்டும் படம் போன்றது. தத்துவங்களைக் காட்ட மாடக் கோயில் ஒரு படம் போன்றது. அதனுலன்றே திருமூலர் தமிழ் மூவாயிரத்தில் "படமாடக் கோயில்" என்று ஆலயத்தையும் "நட மாடக் கோயில்" என்று மனிததேகத்தையும் கூறியுள்ளார்.

கோயில்களுள், ஒரு சுற்று, மூன்று சுற்று, ஐந்து சுற்று, எழு சுற்று எனக் கோயில்கள் பலவகை உண்டு.

(௫) ஆலயம் தொழுதல் எப்படி?

ஆலயத்துக்குச் செல்பவர்கள் முதலில் கொடிக்கம்பத்தின் பக்கத்தில் இருக்கும் நந்தியை வணங்கி, முத்திகாமிகள் இடமாகவும், உலக இன்பத்தை விரும்புபவர்கள் வலமாகவும் சுற்றிப், பின் கருவறையின் முன்னுல் இருக்கும் விநாயகரை வணங்கி, பின் சிவலிங்கப் பெருமானை வணங்கி, பின் முதுகு காட்டாது வந்து சுற்றுக்களில் உள்ள சிவ மூர்த்தங்களையும் அடியார் வடிவங்களையும் வணங்கி, சத்தி கோயில் தனிப்பட இருந்தால் அங்கே சென்று சத்தியையும் வணங்கி, பின் சண்டிகேசுரரை வணங்கி, பின் கொடிக் கம்பத்துக்கு வந்துமும்முறை வணங்கி உட்கார்ந்து இயன்றவரை ஐந்தெழுத்து ஓதி எழுந்து வீடுசெல்லல் வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் கால்நீட்டிக் கும்பிடக் கூடாது.

(௬) ஆலயத்துக்கு எப்படிப் போதல் வேண்டும்?

குளித்து அல்லது கை கால் தூய்மை செய்துகொண்டு, தூய உடை உடுத்து, திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து கொண்டு, பூவோ, பழம் தேங்காய் வெற்றிலை பாக்கு வகைகளோ

கற்பூரமோ இயன்ற தொன்றை எடுத்துக் கொண்டு போக வேண்டும்.

(எ) ஒன்றும் இயலாதவர்கள் என்ன செய்யவேண்டும்?

ஒன்றும் கொண்டுபோக இயலாதவர்கள் கோயிலுக்குச் சென்று அன்புடன் வழிபடவேண்டும்.

(அ) திருவிழாக் காலத்திலோ திருமுழுக்குக் காலத்திலோ அவ்விழாவும் முழுக்கும் நடக்கும் இடத்தைவிட்டுக் கோயிலில் வேறு இடங்களுக்குப் போய் வணங்கலாமா?

வணங்கக் கூடாது. திருவிழா முடிந்ததும் திருமுழுக்கு முடிந்ததும் சென்று வணங்கலாம்.

(கூ) நாடோறும் ஆலயத்தைத் தொழ இயலாதவர்கள் என் செயவேண்டும்?

சோமவாரம், அமாவாசை, பூரணை, ஆதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, மதி மறைவு, சூரியன் மறைவு, சிவராத்திரி முதலிய புண்ணிய நாட்களிலாவது சென்று வணங்கவேண்டும்.

(கo) திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள் எவை?

திருக்கோயிலில் மலம் சலம் கழித்தல், எச்சில் உமிழ்தல், படுத்துத் தூங்கல், வீண்வார்த்தை பேசுதல், சூதாடல், விளையாடுதல் முதலியன ஆகாதன.

(கக) பிற சமயத்தவர்கள் கோயில்களுக்குச் சைவ சமயத்தவர்கள் சென்று வழிபடலாமா?

வழிபடலாகாது. கற்புடைய பெண் தன் கணவனையன்றி வேறு ஆடவரை மனத்தாலும் நினையாததுபோல, சைவர்கள் சிவபிரான், பிள்ளையார், முருகன் முதலிய சிவமூர்த்தங்களை அன்றி வேறு தெய்வங்களை வழிபடலாகாது.

(கஉ) சைவ சமயத்தவர் சிறு தெய்வங்களுக்குப் பலியிட்டு வழிபடலாமா?

ஆடு, கோழி முதலிய வாயில்லாப் உயிர்களைப் பலியிடுதலாகாது.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

—அப்பர்.

அ. வேதாகம இயல்

(க) வேதம்—ஆகமம் என்ற சொற்களுக்குப் பொருள் என்ன?

வேதம்—வித்து என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல். எல்லாப் பொருள்களின் வித்துக்களையும் வேதத்தின்கண் காண லாம். எல்லாப் பொருள்கட்கும் மூலமாயுள்ளது வேதம்.

ஆகம என்ற சொல்லில் ஆ-பதியையும், க-பசுவையும் ம-மாயையையும் குறிக்கும்.

"அமலம் பதி பசு பாசங்கள் ஆகமம்" (திருமூலர்) பதி-பசு-பாசங்களின் இலக்கணங்களை அறிவித்து, ஞானத்தை உண்டாக்கி, இறைவன் திருவடிநிழலை அடையச் செய்வது ஆகமம்.

(உ) வேதம் ஆகமம் எவை?

வேதம் பொது—ஆகமம் சிறப்பு. இரண்டும் ஆதியில் கடவு ளால் அருளப்பட்டவை. வேதம் சூத்திரமும் ஆகமம் அதன் உரையும் போன்றவை.

ஆகமங்கள் இருபத்தெட்டு. அவைகளில் நமக்குப் பயன் படுபவை ஒன்பது.

முதன்முதல் கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட வேதா கமங்கள் மறைந்து போகவே, பின்னும் திரிபுரம் எரித்த விரி சடைக் கடவுள் மகேந்திர மலையினின்றும் வேதாகமங்களை

வெளியிட்டார். அவைகளும் ஒருகாலத்தில் மறைந்து போகவே, திருப்புறம்பயம் என்னும் இடத்திலிருந்து அவரே வேதாகமங்களை வெளியிட்டார்.

அவைகளும் மறைந்து போகவே, பெரியார்கள் மூலமாகத் **திருக்குறள்** முதலிய சங்க இலக்கியங்களாகிய வேதங்களையும், **தமிழ் மூவாயிரம்** (திருமந்திரம்) ஆகிய ஒன்பது ஆகமங்களையும் வெளியிட்டார்.

மேலே கூறிய வேதாகமப் பயிற்சி உலகில் மேம்படும் பொருட்டு அவ் வேதாகமங்களைக் கடைந்து சமய ஆசாரியர்களாகிய நால்வர் பெருமக்களும், ஏனைய திருமுறை ஆசிரியர்களும் 12 திருமுறைகளையும், மெய்கண்டார் முதலிய சந்தான ஆசாரியர்களும், அவர் வழி வந்தவர்களும் சிவஞானபோதம் முதலிய 14 ஞான நூல்களையும் வெளியிட்டனர்.

மேற் கூறியபடி, வேதாகமநூல்கள் பரந்து கிடந்தாலும் சுருக்கமாகக் கொள்ளும்போது நமக்குத் **திருக்குறளே** வேதம், **திருமந்திரமே** ஆகமம் எனலாம்.

(௩) திருக்குறளைச் செய்தவர் யார்?

திருவள்ளுவர் என்னும் பெரியார். அவர் பாண்டிய நாட்டு வேளாளர் வகுப்பில், அரசர் குடியில் பிறந்து, **கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி** என்னும் அரசனிடம் உள் மந்திரத் தலைமை பூண்டு "**வள்ளுவர்**" என்னும் பட்டம் பெற்று, வழுதியின் வேண்டுகோளால் திருக்குறளைப் பாடினார். அவருடைய இயற்பெயர் மறன் எறிந்த வாள் ஆர் **நெடுமாறன் வள்ளுவனார்** என்பது.

(௪) திருமந்திரமாகிய ஆகம நூலைச் செய்தவர் யார்?

சனகர் - சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர் - சிவயோக மாமுனி - மன்று தொழுத பதஞ்சலி - வியாக்கிரமர், **சுந்தர நாதர்** என்ற நந்தியெம்பெருமானுடைய மாணக்கர் எண்மரில் **சுந்தர நாதர்** என்பவர்.

அவர் இரண்டாம் முறையாகக் கைலையிலிருந்து தென்னாடு போந்தபோது, திருவாவடுதுறைக்கு அடுத்த சாத்தனூருக்கு அருகாமையில் வந்தபோது, அவ்வூர் ஆக்கள் மேய்க்கும் '**மூலன்**' என்னும் இடையன் இறந்துபடவே, ஆக்கள் கதறுவதை நோக்கி, சுந்தரநாதர் தம்முடைய உடம்பை ஓர் அரசமரத்துப் பொந்தில் வைத்துவிட்டு, மூலனுடைய உடலில் புகுந்து, ஆக்களை அவை

களுடைய ஊருக்குச் செலுத்திய பின், அரசமரத்தடியில் வந்து தம் உடம்பைத் தேடத், திருவருளால் உடம்பு மறைந்துவிட, மூலனுடைய உடம்பையே தம்முடைய உடம்பாகக் கொண்டு, அப்போதியின் கீழே தவம் இருந்து, ஆண்டுக்கு ஒரு செய்யுளாகத் தமிழ் மூவாயிரத்தைச் செய்து முடித்தார். அதனல் அவருக்கு அன்று முதல் **திருமூலர்** என்று பெயர்.

(ரு) நெடுமாறன் வள்ளுவனர் காலமும் திருமூலர் காலமும் எவை?

நெடுமாறன் வள்ளுவனர் காலம் கி. மு. 75 முதல் கி. பி. 36 ஆகும்; திருமூலர் காலம் கி. மு. 6000 முதல் கி. மு. 100 ஆகும்.

(சு) திருமுறைகள் எவை?

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகள் ஆகும்.

திருநாவுக்கரசர் பாடியவை 4-5-6 திருமுறைகள் ஆகும்.

சுந்தரமூர்த்தி நாயனர் பாடியவை 7-ம் திருமுறையாகும். மாணிக்கவாசகர் பாடியவை 8-ம் திருமுறை ஆகும். சேந்தனர்-கருவூரார் - திருமாளிகைத்தேவர் - கண்டராதித்தர் முதலியோர் பாடியவை 9-ம் திருமுறையாகும்.

திருமூலர் பாடிய தமிழ் மூவாயிரம் 10-ம் திருமுறை ஆகும்.

ஆலவாய் இறைவன் பாடியதும், காரைக்கால் அம்மையார்-பட்டினத்தார் - நக்கீரர் - சேரமான் பெருமாள் முதலியோர் பாடியவையும் 11-ம் திருமுறையாகும்.

சேக்கிழார் பாடிய பெரியபுராணம் 12-ம் திருமுறை ஆகும்.

(எ) பதினன்கு ஞானநூல்கள் எவை?

திருவுந்தியார் - திருக்களிற்றுப்படியார் - சிவஞானபோதம்-சிவஞான சித்தியார் - இருபா இருபஃது - உண்மை விளக்கம் - சிவப்பிரகாசம் முதலிய 14 நூல்களாம்.

(அ) அவைகளைச் செய்தவர்கள் யார்?

திருவிசலூர் உய்யவந்ததேவ நாயனர் திருஉந்தியாரையும், திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர் திருக்களிற்றுப்படியாரையும், பெண்ணகடம் மெய்கண்டார் சிவஞான போதத்தையும்,

திருத்துறையூர் அருணந்திசிவம் சித்தியாரையும் இருபா இருபஃது என்னும் நூலையும், மனவாசகங் கடந்தார் உண்மைவிளக்கத்தையும், உமாபதிசிவம் சிவப்பிரகாசம் முதல் 8 நூல்களையுஞ் செய்து உலகிற்கு உபகரித்துள்ளார்கள்.

(௬) வேதாகமங்களை ஓதும் முறை எப்படி?

தூய்மை செய்யப்பட்ட இடத்தில், பலகையிட்டுப் புத்தகத்தை அதன்மேல் வைத்து, வழிபடு கடவுளை வணங்கி இருந்து, ஒரே மனதுடன் ஓதல் வேண்டும். ஓதுவதோடு பொருள்களை மனதில் கொண்டு அதன்படி நடக்க முயற்சிக்க வேண்டும். கற்பது அதன்படி நடக்கவே ஒழியப் பெருமைக்காக அன்று. நாள்தோறும் குளித்து, அநுட்டானம் செய்தபின் ஒரு நாழிகை அளவாவது வேதாகமங்களில் ஒரு பகுதியையேனும் படித்துப் பொருளை மனதிற் கொண்டு பழக்கத்திற்கும் கொண்டுவர முயல வேண்டும்.

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"

—திருமூலர்.

௩௰. ஊண் இயல்

(௧) மக்களுக்கு விதிக்கப்பட்ட உணவு எது?

பழம் - விதை - காய் - இலை - கிழங்கு முதலியனவும், பசும் பாலும் ஆகும். அரிசி விதை என்பதில் அடங்கும்.

(௨) மக்கள் ஊன் உணவு கொள்ளலாமா?

கொள்ளலாகாது. மனித உடம்பின் அமைப்பை நோக்கினல் மனிதன் ஊனை உண்ணப் படைக்கப்பட்டவன் அல்லன் என்பது தெரியும்.

ஊன் உணவே கொள்ளும் புலி - சிங்கம் முதலிய விலங்குகளின் உடலிலுள்ள உறுப்புக்களின் அமைப்பு, அஃதாவது பற்கள், குடல்கள் முதலியன, எவ்வளவு மாறுபட்டிருக்கின்றன என்பதைப் பாருங்கள். அதனல், கடவுளுடைய அமைப்பு

மானிடர் ஊன் உணவு கொள்ளவேண்டுமென்று இருந்தால் அவ்வண்ணமாக அல்லவோ படைத்திருப்பார்.

காய் கனி கிழங்கு வகைகளைமட்டும் தின்னும் குரங்கு முதலிவற்றை நோக்குங்கள்.

தாவர உணவே கொள்ளும் பசு - ஆடு - எருமை - யானை முதலிய விலங்குகளை நோக்குங்கள்.

இவைகளை ஆராய்ந்து பார்க்கின், மனிதன் ஊன் உணவுக்காகப் படைக்கப்படவில்லை என்றும், காய் - கனி - கிழங்கு - விதை - இலை ஆகிய செடி கொடி மரங்களின் உணவே கொள்ளப் படைக்கப்பட்டிருக்கிறான் என்றும் அறிவோம்.

(௩) மக்களில் பிரிவுகள் உண்டோ ?

உண்டு. மக்கள் தங்கள் ஒழுக்கத்தினாலும், உணவு கொள்ளும் வகையினாலும் பலதிறப்படுவார்கள். மக்கள் பிறப்பினால் ஒன்றேனும், ஒழுக்கத்தால் மாறுபடுவார்கள். ஒரே வகையான ஒழுக்கத்தை உடையவர்கள் ஒவ்வொரு கூட்டமாகக் கூடி வாழ்வார்கள்.

(௪) எல்லாக் கூட்டத்தாரும் ஒன்றாக உண்ணலாமா ?

ஊன் உணவு கொள்ளாதவர்களாகவும் ஒரே ஒழுக்கம் வாய்ந்தவர்களாகவும் உள்ளவர்களிடம் உணவு கொள்ளலாம்.

(௫) உண்பதற்கு உரிய இலைகள் எவை ?

வாழை - பலா - புன்னை - பலாசு - பாதிரி - தாமரை - புரசு - தேக்கு - பூவரசு - தென்னை முதலியன. பெரியவைகளாயுள்ள இலைகளை அப்படியே போட்டுக் கொள்ளலாம். ஏனையவைகளைத் தைத்துப் போட்டுக் கொள்ளலாம்.

(௬) உணவு கொள்ளும்போது எப்படி இருக்கவேண்டும் ?

வீண் வார்த்தை பேசாமலும், சிரியாமலும், தூங்காமலும், அசையாமலும், மனதை வேறு வழிகளில் செலுத்தாமலும் இருந்து, ஒவ்வொரு பதார்த்தங்களின் சுவையை அறிந்து, மென்று, உமிழ் நீரோடு நன்றாய்க் கலந்து உட்கொள்ள வேண்டும். அவசரப்படக்கூடாது.

(எ) உணவு கோள்ளும் முறை எப்படி?

அறுவகைச் சுவைகளில் முதலில் நெய்யுடன் சேர்ந்த துவர்ப்பு உணவையும், பின் கார்ப்பு புளிப்பு உணவுகளையும், பின் கசப்பு தித்திப்பு உணவுகளையும் உண்ணல் வேண்டும். உவர்ப்பு எல்லாப் பதார்த்தங்களுடனும் கலந்திருக்கும். இடையிடையே காய் கறி கிழங்கு கீரை வகைகளைத் தொட்டுக்கொள்ளவேண்டும். உமிழக்கூடியவற்றை இலையின் ஓரமாகத் துப்ப வேண்டும்.

(அ) பின் யாது செய்தல் வேண்டும்?

உண்டபின் நீர் கொண்டு வாய் கொப்பளித்துக் கைகால் தூய்மை செய்யவேண்டும். உணவின் துகள்கள் பல் இடுக்கில் சேராமல் வாயைத் துப்புரவு செய்ய வேண்டும். அப்படிப் பல் இடுக்கில் உணவுப் பொருள்களைச் சேரவிடுபவர்கள் விரைவில் பல்லை இழப்பார்கள்.

(கூ) அதன்பின் யாது செய்தல் வேண்டும்?

உண்ட இலையை எடுத்து அந்த இடத்தைப் பசுவின் சாணத்தால் மெழுகித் துப்புரவு செய்தல் வேண்டும்.

(க0) ஏன் பசுவின் சாணத்தால் மேழுகவேண்டும்?

உண்ட இடத்தில் உணவுப் பொருள்கள் சிந்துமாதலால், கிருமிகள் உண்டாகும். கிருமிகள் மனித உடம்பில் சேர்ந்தால் பல வகையான நோய்களுக்கு இடமாகும்.

பசுவின் சாணம் கிருமிகளைக் கொல்லும் சத்தி வாய்ந்தது. உண்ட இடத்தைச் சாணம் கொண்டு மெழுகித் தூய்மை செய்து விட்டால் கிருமிகள் உண்டாகா. சாணம் கொண்டு வாசல் தெளிப்பதும், வீடு மெழுகுவதும் இக்கருத்துப்பற்றியே ஆகும்.

"அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக உள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்
திச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே"

—திருமூலர்.

முற்றும்.

கழகச்

சைவ வினுவிடை

(இரண்டாம் புத்தகம்)

திருமந்திரமணி
துடிசைகிழார், அ. சிதம்பரனர்
எழுதியது.

விலை அணு 12.

கழக வெளியீடு: ௩௫௯

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்:
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை அணா 3.

அப்பர் அச்சகம், சென்னை-1—C. 8200.